1975 அக்டோபர் 27]

கல்கரி, நிலக்கரி ஒதுக்கீடு

*77 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தொழிற்சாலைகள் உபயோகத்திற்கான கல்கரி, நிலக்கரி ஆகியவைகள் பங்கு விகிதத்தில் (Quota System) ஒதுக்கப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தமிழ்நாட்டில் சிறுதொழில் பிரிவுகளுக்குச் சட்டப்படிக்கான பங்களவு முறையின் கீழ் கல்கரியும், வணிகர்களிடமிருந்து ஒரு வாகனுக்குக் குறைவாக நிலக்கரி தேவைப்படுவோருக்கு மட்டும் தனி அடிப்படையிலான பங்களவு முறையின் கீழ் நிலக்கரியும் வழங்கப்படுகின்றன. இவ்விரு முறைகளும் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுத் தொழிற்சாலைக்கு உபயோகப்படுகிற கல்கரியும், நிலக்கரியும் தொழிற்சாலைகளுக்கு இன்ன இன்ன விகிதாசாரப்படி ஒதுக்குகிற முறையை மத்திய அரசு மேற்கொள்ளுகிறதா ? அல்லது நமது மாநில அரசே அத்தகைய அதிகாரத்தைப்பெற்று எந்த எந்த தொழிற்சாலைக்கு எவ்வளவு விகிதாசாரம் என்பதை முடிவு செய்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில்—ஸ்டாசுடரி கண்டிரோல், நான்-ஸ்டாச்சுடரி கண்டிரோல் என்று இரண்டு. Statutory control for the distribution of coke. என்ற வகையில் இருக்கிறது. இதுபற்றி மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஒதுக்கியிருக்கிறது. அதை மாநில சர்க்கார் விநியோகம் செய்கிறது. ஸ்டீம் கோல், லாப் கோல், சாப்டு கோல் ஆகியவற்றுக்கு கட்டுப்பாடு இல்லை.

Drinking water, electricity supply in slum areas

* 78 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the slums in Madras City are provided with drinking water and electricity facilities; and